செயல்பாட்டுக்கு வந்தது கஞ்சனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்



கஞ்சனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக செயல்பாட்டை தொடங்கி வைத்துப் பேசிய விக்கிரவாண்டி எம்எல்ஏ ச.சிவக்குமார். உடன் அலுவலர்கள்.

விழுப்புரம், அக். 20: விழுப்புரம் மாவட்டம், கஞ்சனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் செவ்வாய்க்கிழமை செயல்பாட்டுக்கு வந்தது.

விழுப்புரம் மாவட்டம், காணை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 23 ஊராட்சிகளும், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 20 ஊராட்சிகளும் தனியாக பிரிக்கப்பட்டு கஞ்சனூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் என கடந்த மார்ச் மாதம் அரசாணை வெளியிடப்பட்டது. இதைத்தொடர்ந்து அன்னியூர், அனுமந்தைபுரம், அத்தியூர் திருக்கை, கடையம், கல்யாணம்பூண்டி, கஞ்சனூர் கருவாட்சி, மேல்காரணை, நல்லாம்பாளையம் உள்ளிட்ட 43 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்பட்டு, கஞ்சனூரில் உள்ள அரசுக்குச் சொந்தமான சமுதாயக் கூடத்தில் செயல்பாட்டுக்கு வந்தது.

இதையொட்டி நடைபெற்ற விழாவில் விக்கிரவாண்டி எம்எல்ஏ ச.சிவக்குமார் பங்கேற்று அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

கஞ்சனூர் ஊராட்சி ஒன்றியத்துக்கான புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்காக கஞ்சனூர் பகுதியில் அரசுக்கு சொந்தமான ஒரு ஏக்கர் 90 சென்ட் இடம் தேர்வு செய்யப்பட்டு அரசின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, புதிய கட்டடம் கட்டுவதற்கான பணிகள் தொடங்கும். புதிய கட்டடம் கட்டி முடிக்கப்படும் வரை விழுப்புரம்- செஞ்சி சாலையில், கஞ்சனூர் பகுதியில் சமுதாயக் கூடத்தில் அலுவலகம் செயல்படும். வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொறியாளர் மற்றும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுவிட்டதால் இந்த ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட 43 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் இந்த அலுவலகம் மூலம் பயன் பெறலாம் என்றார் எம்எல்ஏ ச.சிவக்குமார்.

கஞ்சனூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ப.முல்லை, பாலச்சந்திரன் மற்றும் அரசுத் துறைகளின் அலுவலர்கள், அரசியல் கட்சியினர், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

மழையால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நிவாரண உதவிகள்



வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நிவாரண உதவிகளை வழங்கிய சமூக நீதித் துறை அமைச்சர் வன்னி அரசு.

விழுப்புரம், அக். 20: திண்டிவனம் அருகே வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததால் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்துக்கு சமூக நீதித் துறை அமைச்சர் வன்னிஅரசு செவ்வாய்க்கிழமை நிவாரண உதவிகளை வழங்கி ஆறுதல் தெரிவித்தார்.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வரும் நிலையில் விழுப்புரம் மாவட்டப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருகிறது. இந்த மழையால், திண்டிவனம் வட்டம், மங்கலம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்பவரது வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது.

இதில் பாதிக்கப்பட்டுள்ள சுப்பிரமணியன் குடும்பத்தினரை திண்டிவனம் தொகுதி எம்எல்ஏவும், சமூக நீதித் துறை அமைச்சருமான வன்னி அரசு செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

தொடர்ந்து தமிழக அரசு சார்பில் அரிசி, வேட்டி, சேலை மற்றும் ரூ. 5 ஆயிரம் ரொக்கம் ஆகியவற்றை நிவாரண உதவிகளாக வழங்கினார். அப்போது உடனிருந்த அரசுத் துறைகளின் அதிகாரிகளிடம் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு தமிழக அரசு சார்பில் புதிய வீடு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அமைச்சர் உத்தரவிட்டார்.

மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ், வட்டாட்சியர் ஞானசௌந்தரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வெற்றிவேல், சிவக்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

விக்கிரவாண்டியில்... இதே போல் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட விக்கிரவாண்டி வட்டம், தும்பூர் கிராமத்தைச் சேர்ந்த நாகராஜ்(42) என்பவரின் குடும்பத்துக்கு, தொகுதி எம்எல்ஏ ச.சிவக்குமார் அரசு சார்பில் நிவாரண உதவிகளை வழங்கி, ஆறுதல் தெரிவித்தார். நிகழ்ச்சியில் மண்டல துணை வட்டாட்சியர் பிரசாத், வருவாய் ஆய்வாளர் தமிழரசன், கிராம நிர்வாக அலுவலர் மகாலட்சுமி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

கல்லூரியில் ஆயுத பூஜை வழிபாடு



சரசுவதி கலை, அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ஆயுத பூஜை வழிபாட்டில் பங்கேற்றோர்.

விழுப்புரம், அக். 20: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கோனேரிக்குப்பம் சரசுவதி கலை, அறிவியல் கல்லூரியில் நவராத்திரி கொலு மற்றும் ஆயுத பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

கல்லூரி முதல்வர் வீரமுத்து தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மருத்துவர் ராமதாசு கல்வி அறக்கட்டளை முதன்மை நிர்வாக அலுவலர் சிவக்குமார், கல்லூரி நிர்வாக அலுவலர் சிவா, பெற்றோர்-ஆசிரியர் கழக ஒருங்கிணைப்பாளர் தண்டபாணி ஆகியோர் பேசினர்.

ஆயுத பூஜை விழா நிகழ்ச்சியாக மாணவ, மாணவிகளின் கலைநிழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்வில் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

CHANGE OF NAME

I, **MOHAMAD JAMIL FATHIMUTHU**, residing at No.40, Arapani Avvai Street, Nethaji Nagar-III, Uppalam, Pondicherry 605 001, hereby change my name as **MOUHAMAD SAID FATHIMUTHU**, and hence forth I shall be called as **MOUHAMAD SAID FATHIMUTHU** only

Mohamad Jamil Fathimuthu

பொது அறிவிப்பு

திரு. **R** அன்பு, த/பெ. ராதாகிருஷ்ணன், எண்.**14/B**, ஐந்தாவது குறுக்குத் தெரு, குறிஞ்சி நகர் விரிவாக்கம் லாஸ்பேட், புதுச்சேரி–605008, அவர்களுக்கு விழுப்புரம் மாவட்டம், வானூர் தாலுக்கா, குன்னம் கிராமம், மொத்தப் பரப்பளவு **2.55.00** ஹெக்டேர், புல எண்கள். **32/4A & 35/4** ஆகியவற்றில் சாதாரண மண் குவாரி எடுக்க மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் அனுமதி கடிதம், **File.No.14010 / E.C.No: EC26C0108TN5774998N** dated: **08.10.2026** வாயிலாக பெறப்பட்டுள்ளது. இதன் நகலினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாநில சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு ஆணையத்தின் இணையதளத்தில் காணலாம்.

– திரு. **R** அன்பு, த/பெ. ராதாகிருஷ்ணன், எண்.**14/B**, ஐந்தாவது குறுக்குத் தெரு, குறிஞ்சி நகர் விரிவாக்கம் லாஸ்பேட், புதுச்சேரி–605008

தியாகதுருகம் பெருமாள் கோயிலில் திருவோண வழிபாடு



தியாகதுருகம் ஓம்சக்தி செல்வ விநாயகர் கோயிலில் திருவோணத்தையொட்டி வெள்ளிக் கவச அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த பெருமாள்.

கள்ளக்குறிச்சி, அக். 20: தியாகதுருகம் பெருமாள் கோயிலில் திருவோண வழிபாடு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தியாகதுருகம் வைசியர் சாலையில் உள்ள ஓம்சக்தி செல்வவிநாயகர் கோயிலில் உள்ள பெருமாளுக்கு ஐப்பசி மாத திருவோணத்தையொட்டி செவ்வாய்க்கிழமை காலை சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடைபெற்றது.

பின்னர் பெருமாளுக்கு வெள்ளிக் கவசம் அணிவிக்கப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

இதில், திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமியை வழிபட்டனர்.

நாளைய மின்தடை

தியாகதுருகம் பகுதிகள் (கள்ளக்குறிச்சி மாவட்டம்)

நேரம்: வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை.

பகுதிகள்: தியாகதுருகம், பெரியமாம்பட்டு, சின்னமாம்பட்டு, எலவனாசூர்கோட்டை, தியாகை, பாவந்தூர், நூரோலை, லாலாபேட்டை, சேரந்தாங்கல், பழைய சிறுவங்கூர், சூளாங்குறிச்சி, ரிஷிவந்தியம், வெங்கலம், அரியந்தக்கா, பிரிதிவிமங்கலம், மடம், வீரசோழபுரம், மாடூர், பாளையம்.

சிலம்பம் போட்டியில் மாநில அளவில் 2–ஆம் இடம் பிடித்த விழுப்புரம் மாணவர்



முதல்வர் கோப்பைக்கான சிலம்பம் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்ற மாணவர் இ.சூர்யா. உடன், பயிற்சியாளர் அன்பரசி.

விழுப்புரம், அக். 20: சென்னையில் நடைபெற்ற தமிழக முதல்வர் கோப்பைக்கான சிலம்பம் போட்டியில் விழுப்புரத்தைச் சேர்ந்த பள்ளி மாணவர் 2–ஆம் இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார்.

விழுப்புரம் ஜெகநாதபுரம் பகுதியைச் சேர்ந்தவர் இ.சூர்யா. இவர், விழுப்புரத்தில் உள்ள பள்ளியில் பிளஸ் 2 படித்து வருகிறார்.

சென்னை மேலகோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்தில் அக்.19–ஆம் தேதி நடைபெற்ற மாநில அளவிலான முதல்வர் கோப்பை சிலம்பம் போட்டியில் 70 கிலோ எடைப் பிரிவில் இரண்டாம் இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் மற்றும் ரூ.75 ஆயிரம் பரிசுத் தொகை பெற்றார்.

விழுப்புரம் மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துள்ள மாணவர் சூர்யாவுக்கு, பயிற்சியாளர் அன்பரசி, பள்ளி ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

தீபாவளி போனஸ்: பல்வேறு தொழிற்சங்கங்கள் வலியுறுத்தல்





விழுப்புரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில துணைப் பொதுச் செயலர் டி.பழனிவேல். (வலது) கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற ஏஐடியுசி தொழிற்சங்க குழுக் கூட்டத்தில் பேசிய மாவட்ட துணைத் தலைவர் அப்பாவு.

விழுப்புரம்/கள்ளக்குறிச்சி, அக். 20: தமிழகத்தில் தீபாவளி பண்டிகைக்கு ஒரு வாரத்துக்கு முன்பே தீபாவளி போனஸ் வழங்க வேண்டும் என பல்வேறு தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு-சார்பு) தொழிற்சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் விழுப்புரத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு மின்வாரியத்தில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்யவேண்டும். ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கான தினக்கூலியை மின்சார வாரியமே வழங்கவேண்டும். தீபாவளி பண்டிகைக்காக போனஸ் வழங்கவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் சார்பில் எதிர்வரும் நவ.2–ஆம் தேதி சென்னையில் உள்ள மின்வாரிய தலைமை அலுவலகம் முன் தொடர் போராட்டம் நடைபெறவுள்ளது. அதற்கான முன்னேற்பாடுகள் குறித்து பேரவைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்துக்கு விழுப்புரம் கிளைத் தலைவர் ஆர்.சேகர் தலைமை வகித்தார். மாநில துணைப் பொதுச் செயலர் டி. பழனிவேல் பங்கேற்று, போராட்டத்தின் நோக்கம் குறித்துப் பேசினார். விழுப்புரம் கிளைச்செயலர் ஆர்.அருள், சிஐடியு விழுப்புரம் மாவட்டச் செயலர் ஆர். மூர்த்தி மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

அக்.31–இல் ஏஐடியுசி ஆர்ப்பாட்டம்: கள்ளக்குறிச்சி மாவட்ட ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் மாவட்டக்குழுக் கூட்டம் கள்ளக்குறிச்சியில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்டப் பொருளாளர் கல்யாண சுந்தரம் தலைமை வகித்தார். மாவட்ட பொதுச் செயலர் கோவிந்தராஜ், மாவட்ட துணைத் தலைவர்கள் அப்பாவு, முனுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தீர்மானங்கள்: அக்.11–ஆம் தேதி ஒகூரில் நடைபெற்ற தமிழ்நாடு ஏஐடியுசி 21–ஆவது மாநில மாநாட்டின் அறைகூவல் படி, அமைப்பின் 107–ஆவது அமைப்பு தினமான அக்.31–ஆம் தேதி கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலை முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது. தமிழ்நாடு அரசு தொழிலாளர் கொள்கைகளை விரைவாக அறிவிக்கவேண்டும். உள்ளாட்சி, மருத்துவம், போக்குவரத்து, மின்வாரியம், டாஸ்மாக், சிவில் சப்ளை உள்ளிட்ட அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் அவுட்சோர்சிங், சுயஉதவிக்குழு போன்ற ஒப்பந்த பணி நியமன முறைகளை முற்றாக அகற்றவேண்டும்.

தமிழ்நாடு நிரந்தர தகுதி வழங்குதல் சட்டப் படி 2 ஆண்டுகளில் 480 நாள்கள் பணியாற்றிய தொழிலாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்வதோடு, காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். அனைத்து தொழிலாளர்களுக்கும் தீபாவளிக்கு ஒரு வாரத்துக்கு முன்பாகவே போனஸ் வழங்க அரசு மற்றும் தொழிலாளர் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.100 வீதம் உணவுப் படி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் ஏஐடியூசி மாவட்டச் செயலர்கள் அருண், ஆண்டாள், மாவட்டக் குழு உறுப்பினர்கள் அமுதா, கௌதமி, மேரி, ராஜி, அருள்மணி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

equitas SMALL FINANCE BANK

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் (Formerly Known as Equitas Finance Ltd)

பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050.

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV – A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திருமதி பரிமளா திரு லோகன் M இருவரும் வசிக்கும் இடம்: எண்.440 அரிஜன காலனி கீழ்ப்பட்டு போலு, திருவண்ணாமலை, வடமாதிமங்கலம், தமிழ்நாடு-606907	திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கீழ்ப்பட்டு கிராமம், அன்னை நகர், மனை எண்.15-ல் அமைந்துள்ளது பட்டா எண்.1326-ல் உள்ள, கிராம சர்வே எண்கள் 158/5A, 158/5B, 158/5D ஆகியவை உட்பிரிவு செய்யப்பட்டு, பட்டா எண்.158/26-ன்படி சர்வே எண்கள் 158/5A1, 158/5B1, 158/5D1A என உள்ள 1,328 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி மனை.	ரூ.5,32,000/- ரூ.53,200/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEARANI0463727 15.06.2026 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.1,44,572/- மேலும் 16.06.2026 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.1,57,295/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, சண்முகம் 9965633123, பூபாலன்.G 9944841879				
திருமதி சாரதி E C/o திரு ஏழுமலை திருமதி செண்பகம் S C/o திரு.சவரிமுத்து இருவரும் வசிக்கும் இடம்: எண்:4/126, அருந்ததியர் செயின்ட், அவலூர்பேட்டை, செஞ்சி, அவலூர்பேட்டை, விழுப்புரம், தமிழ்நாடு, 604201.	விழுப்புரம் மாவட்டம், அவலூர்பேட்டை கிராமத்தில், நத்தம் சர்வே எண்.174, பட்டாவின்படி புதிய சர்வே எண்.174/13-ல் அமைந்துள்ள 1,064 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் –திரு.சடையனுக்கு சொந்தமான மனை; தெற்கில் – திரு கண்ணனுக்கு சொந்தமான மனை; கிழக்கில் – திரு.சடையன் மற்றும் பலராமனுக்கு சொந்தமான வீடு; மேற்கில் –தெரு.	ரூ.7,24,000/- ரூ.72,400/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SETNDNM0440186 19.08.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.4,96,771/- மேலும் 20.08.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகைரூ.6,43,204/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, மென்சன் 9626378832, பாஸ்கரன் 7598239524				
திரு ஞானசெல்வன் S C/o திரு சந்தரேசன் திருமதி மகேஸ்வரி V C/o திரு விவேகானந்தன் இருவரும் வசிக்கும் இடம்: எண் 137 பழைய தொட்டி தெரு, கொளத்தூர், குளத்தூர், திருவண்ணாமலை, தமிழ்நாடு, 606755	திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், கொளத்தூர் கிராமத்தில், நத்தம் சர்வே எண்.184/1-ல் அமைந்துள்ள 1,316 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து; திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், கொளத்தூர் கிராமத்தில், நத்தம் சர்வே எண்.184/5 பழைய சர்வே எண்.184/1-ல் அமைந்துள்ள 2,381 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும்; திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வட்டம், கொளத்தூர் கிராமத்தில், நத்தம் சர்வே எண்.184/5 பழைய சர்வே எண்.184/1-ல் பொதுவழியாக உள்ள 371 சதுர அடி பரப்பளவும் அடங்கும்	ரூ.23,24,000/- ரூ.2,32,400/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SETRVNM0338402 / 200001683998 12.03.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.16,26,493/- மேலும் 13.03.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகைரூ.23,95,090/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, ஆனந்தகுமார் 9944841879, பூபாலன்.G- 9944841879				
திரு/திருமதி கண்ணதாசன் திரு/திருமதி கோமதி S இருவரும் வசிக்கும் இடம்: வடக்குத் தெரு நெற்குணம், நெற்குணம் திருக்கோயிலூர், அரகண்டநல்லூர், வடகரைத்தாயனூர் B.O-திருச்சி, தமிழ்நாடு, 605752	விழுப்புரம் மாவட்டம், நெற்குணம் கிராமத்தில், பழைய சர்வே எண்.23/9, புதிய சர்வே எண்.53/7-ல் அமைந்துள்ள 624 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் – தெரு; தெற்கில் – திரு.விநாயக மூர்த்தி-க்கு சொந்தமான மனை; கிழக்கில் – தெரு; மேற்கில் – திரு. பாலாஜி-க்கு சொந்தமான மனை.	ரூ.8,39,000/- ரூ.83,900/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700011255911 17.11.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.7,39,905.87/- மேலும் 18.11.2025 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.9,13,060/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்கனை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, பாஸ்கர் 9092922922, பாஸ்கரன் 7598239524				
திரு தயாளன்.M C/o திரு.மாரியப்பன் திரு மாரியப்பன்.M C/o திரு முருகேசன் திருமதி கவிதா D C/o திரு தயாளன் திருமதி வீரம்மாள் M C/o திரு மாரியப்பன் அனைவரும் வசிக்கும் முகவரி: எண்:3/14 பிள்ளையார் கோவில் தெரு, சித்தானி, சித்தானி, விழுப்புரம், தமிழ்நாடு, 605652	விழுப்புரம் மாவட்டம், சித்தானி கிராமத்தில், நத்தம் சர்வே எண்.92/6B மற்றும் பழைய சர்வே எண்.92/6 பகுதி-ல் அமைந்துள்ள 527 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் –திரு. காளிதாஸ்-க்கு சொந்தமான நிலம்; தெற்கில் – திரு. சடையன் -க்கு சொந்தமான மனை; கிழக்கில் – தெரு; மேற்கில் – திரு. சடையன்-க்கு சொந்தமான மனை.	ரூ.2,09,000/- ரூ.20,900/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEVLPII0300095 20.04.2023 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.2,14,329/- மேலும் 21.04.2023 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.4,82,011/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, பாஸ்கர் 9092922922, பாஸ்கரன் 7598239524				
திரு மகாலிங்கம் M C/o திரு முனுசாமி, எண், 19, சர்க்கார் தெரு, சித்தானி, சித்தானி, விழுப்புரம், தமிழ்நாடு, 605652 திருமதி அஞ்சலை M C/o திரு முனுசாமி எண், 19, போர்த்தி அம்மன் கோவில் தெரு, சித்தானி, சித்தானி, விழுப்புரம், தமிழ்நாடு, 605652 திருமதி கோமளா M C/o திரு மகாலிங்கம் எண், 3/16, மாரியம்மன் கோவில் தெரு, சித்தானி, சித்தானி, விழுப்புரம், தமிழ்நாடு, 605652	விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஊராட்சி ஒன்றியம், சித்தானி, கிராமத்தில், சர்வே எண்.210/2 மற்றும் பழைய சர்வே எண்.91-ல் அமைந்துள்ள 591 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் – திரு. பெரியசாமி-க்கு சொந்தமான மனை; தெற்கில் – தெரு; கிழக்கில் –திரு. ராஜாமணி-க்கு சொந்தமான மனை; மேற்கில் – திருமதி. ராஜகுமாரி-க்கு சொந்தமான மனை.	ரூ.8,09,000/- ரூ.80,900/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEVLPII0303136 14.11.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.9,06,284/- மேலும் 15.11.2025 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.10,85,766/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, பாஸ்கர் 9092922922, பாஸ்கரன் 7598239524				
திரு ஷாம்சுந்தர் A C/o திரு ஆறுமுகம் திருமதி மோகனப்பிரியா S C/o திரு ஷாம்சுந்தர் இருவரும் வசிக்கின்றனர் எண் 5/74 மாரியம்மன் கோயில் தெரு பெரியமூர், விழுப்புரம், தேவதானம்பேட்டை, விழுப்புரம், தமிழ்நாடு, 604151	விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், பெரியமூர் கிராமத்தில், கிராம சர்வே எண்.13/1A4, புதிய சர்வே எண்.13/23, உட்பிரிவு சர்வே எண்.13/1A 4 E - ல் அமைந்துள்ள 3,924 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் – மாரியம்மன் கோயில் தெரு; தெற்கில் – தரிசு நிலமும் கிணறும்; கிழக்கில் – திரு. காளி-க்கு சொந்தமான சொத்து; மேற்கில் – திரு. சந்திரகாசம்-க்கு சொந்தமான சொத்து	ரூ.17,45,000/- ரூ.1,74,500/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEGINGE0411661 / 200001831474 01.10.2024 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.10,55,987/- மேலும் 02.10.2024 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.15,14,112/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, செல்லப்பன் 9095963693, பூபாலன்.G 9944841879				
திரு ஐயப்பன் S C/o திரு சத்தியசீலன் திருமதி மணிமேகலை S C/o திரு சத்தியசீலன், திரு சத்தியசீலன்.P C/o திரு.பரசுராமன் அனைவரும் வசிக்கும் முகவரி: எண் 106 காந்தி தெரு கர்ணாவூர் திண்டிவனம் விழுப்புரா, கர்ணாவூர், விழுப்புரம், தமிழ்நாடு, 604001	திண்டிவனம் மாவட்டம், கர்ணாவூர் கிராமத்தில், புதிய சர்வே எண்.133/7, புதிய சர்வே எண்.13/1 பகுதி, பழைய சர்வே எண்.122/1B-ல் அமைந்துள்ள 1388 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் –திரு.காளி மற்றும் பிறருக்குச் சொந்தமான மனை; தெற்கில் – சாலை; கிழக்கில் –திரு. சின்னையன்-க்கு சொந்தமான மனை; மேற்கில் – திரு. நந்தன்-க்கு சொந்தமான மனை.	ரூ.4,78,000/- ரூ.47,800/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SETNDNM0319818 24.06.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.6,15,746/- மேலும் 25.06.2025 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.7,19,894/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, மென்சன் 9626378832, பாஸ்கரன் 7598239524				
திரு திருவாசகன் A C/o திரு ஐயாகண்ணு திருமதி உமாமகேஸ்வரி T C/o திரு திருவாசகன் இருவரும் வசிக்கும் முகவரி: எண் 774 தெற்கு தெரு, சாத்தவட்டம், காட்டுமன்னார் கோவில், கடலூர், தமிழ்நாடு, 608701	கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், சாத்தவட்டம், கிராமத்தில், புஞ்சை சர்வே எண்.52/13-ல் அமைந்துள்ள 1744 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் – திரு. வேல்முருகன்-க்கு சொந்தமான மனை; தெற்கில் – விற்பனையாளரின் மீதமுள்ள சொத்து; கிழக்கில் – சாலை; மேற்கில் – திரு. அம்பலவாணன்-க்கு சொந்தமான மனை.	ரூ.3,27,000/- ரூ.32,700/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEKTMNK0293426 24.06.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.3,23,700/- மேலும் 25.06.2025 முதல் மாதாந்திர எதிர் கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.4,20,809/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237, ஜெயராஜ் 9751714570,				

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 25.11.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.equitas.bank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.